# இயேசு கிறிஸ்துவின் உவமைகள்

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

2

படங்களுடன்

உனக்கு விரோதமாக யார்
என்ன சொல்லியிருந்தாலும்
சரி, என்ன செய்திருந்தாலும்
சரி, நீ அவர்களை
இருதயத்தின் ஆழத்திலிருந்து
மன்னிக்க
முடியவில்லையானால், ஏதோ
ஒரு குறையிருக்கிறது.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்




*மத்தேயு 18:21-35*

21. அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து, ஆண்டவரே என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான்.



22. அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்.

23. எப்படியெனில், பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப்பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது.



24. அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாக கொண்டுவந்தார்கள்.



25. கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி

பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விட்டு, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான்.

26. அப்பொழுது அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான்.



27. அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைப்பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்.

28. அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக்கண்டு, அவனைப்பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்கு கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான்.



29. அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான்.



30. அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான்.



31. நடந்ததை அவன் உடன்வேலைக்காரர் கண்டு, மிகவும்

துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள்.



32. அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால், அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன்.

33. நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி,

34. அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்.



35. நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்.



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# 56-08-05 சபையும் அதன் நிலையும்

137. பின்வாங்கிப்போனவர்கள் எத்தனை பேர் இங்குள்ளனர்?''

"பின்வாங்கிப் போனேன் என்று நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். சகோ. பிரான்ஹாம்'' என்கிறீர்களா?

ஆனால் பார். தாழ்மையான புறா உன்னிலிருந்து பறந்து விட்டிருக்கிறது.

ஒருவரோடொருவர் நீங்கள் சகித்துப் போக முடியவில்லையானால், எங்கேயோ ஏதோ ஒரு தவறு இருக்கிறது.

உனக்கு விரோதமாக யார் என்ன சொல்லியிருந்தாலும் சரி, என்ன செய்திருந்தாலும் சரி, நீ அவர்களை இருதயத்தின் ஆழத்திலிருந்து மன்னிக்க

முடியவில்லையானால், ஏதோ ஒரு குறையிருக்கிறது.

ஆழத்திலிருந்து உன்னால் மன்னிக்கக் கூடவில்லை.... "உன்னுடைய கடனாளிக்கு நீ மன்னிக்காவிட்டால், பரலோகத்திலிருக்கும் உன் பிதாவும் உன்னுடைய பாவங்களை மன்னிக்கமாட்டார்'' என்று இயேசுவே சொல்லியிருக்கிறார்.

---



சகோதர சிநேகத்தை நாம் அடைவதென்பது, ஒரு சகோதரனின் காரியத்தில் உன்னையே அவனுடைய நிலையில் வைத்து பார்ப்பதாகும்.



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# மத்தேயு 18:21-35




21. அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து, ஆண்டவரே என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான்.

22. அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்.

23. எப்படியெனில், பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப்பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது.

24. அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன் பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாக கொண்டுவந்தார்கள்.

25. கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன்

அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விட்டு, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான்.



26. அப்பொழுது அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும்,

எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான்.

27. அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைப்பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்.

28. அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக்கண்டு, அவனைப்பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்கு கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான்.

29. அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான்.



30. அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத்

தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான்.

31. நடந்ததை அவன் உடன்வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள்.

32. அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால், அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன்.

33. நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி,

34. அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்.

35. நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய்

மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்.



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## 62-1014M ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி Jeffersonville, Indiana, USA

118. "பூரணத்துவத்திற்கு" தேவபக்தி அவசியமாயிருக்கிறது. நீ உன் விசுவாசத்துடன் தேவ பக்தியைக் கூட்டிக்கொள். பாருங்கள், நீங்கள் கீழே இங்கே வல்லமையிலிருந்து ஆரம்பித்து தேவபக்தி! ஓ, என்னே! நம் நேரம் கடந்து சென்றுக் கொண்டேயிருக்கின்றது. நாம் இப்பொழுது காண்போம். இந்த வரைபடத்தில் காண்பிக்கப்பட்டது போல் இங்கு நீ வல்லமை என்ற காரியத்தில் ஆரம்பித்து பின்பு தேவ ஞானத்திற்கும், தன்னடக்கத்திற்கும், பொறுமைக்கும், தேவ பக்திக்கும் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக கடந்து செல்கின்றாய். ஓ! "தேவ

பக்தியென்றால்'' என்னவென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அதற்கான ஒரு பாடலும் உங்களுக்குத் தெரியும்: இயேசுவைப் போல, இயேசுவைப் போல, இப்பூமியிலிருக்க நான் வாஞ்சிக்கிறேன்; இப்பூமியினின்று மகிமைக்கு என், ஜீவப் பயணமெல்லாம். நான் அவரைப் போலவே இருக்க அழைக்கப்படுகிறேன். அது தேவ பக்தியாகும்.





அவர் ஒரு கன்னத்தில் அடிபட்ட போது, மறு கன்னத்தையும் காண்பித்தார். அவர் கடினமாக நடத்தப்பட்ட போது, மறு உத்தரவு பேசவில்லை; திரும்பவும் கோபத்துடன் பதிலளிக்கவில்லை. பாருங்கள்? அதுவே தேவத் தன்மையாயிருக்கிறது. ''பிதாவுக்கு, பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால்'' என்று ஒரே நோக்கத்தையே அவர் கொண்டிருந்தார். பாருங்கள்? ஆம், ஐயா. எப்பொழுதுமே அதுவே தேவபக்தியாகும்.

119. பாருங்கள்? இவ்விதமாக இந்த நிலைகளினூடே நீ கடந்து, கடந்து வரும்போது, ஒரு தேவ குமாரனுக்கொத்த பூரண வளர்ச்சியின் நிலையை அடைகின்றாய். ஆனால், நீ ஒவ்வொன்றையும் கூட்டி பெற்றுக் கொண்டே வர வேண்டும். ஒன்று பூரணப்படும் வரை மற்றொன்றை நீ ஆரம்பிக்க முடியாது. மயிலிறகுகளை சொருகிக் கொண்ட அந்த கருப்பு பறவையை ஞாபகம் கொள்ளுங்கள். பாருங்கள்? நீ நிச்சயமாக மறுபடியும்

பிறவாமல் இவைகளை உன்னோடு கூட்ட முயற்சிக்காதே, ஏனெனில் அது கிரியை செய்யாது. உன்னால் அதைக் கிரியை செய்ய வைக்கவும் முடியாது. ஒருவேளை அது ஒரு நிலை வரை வந்து, பின்பு எங்காவது ஒரு இடத்தில் கட்டிடம் முழுமையையும் இடித்து விடும்.



ஆனால் உண்மையான மறுபிறப்பான புறாவாக நீ ஆகும் பொழுது, இவைகளை நீ உன்னோடு கூட்டுவதில்லை, ஆனால் அவைகளே உன்னோடு சுபாவமாகக் கூட்டப்பட்டு பரிபூரணத்திற்கு வழி நடத்தும்.

120. அது சரி. இப்போது பூரணத்திற்கு வருகிறது. சரி. ஆறாவதாக ''சகோதர சிநேகம்'' அல்லது ''சகோதர அன்பை'' கூட்டி வழங்குங்கள். ஆறாவது, ஏழாவதான இது, இது ஒரு அருமையான காரியம். சரி. சகோதர சிநேகத்தைக் கூட்டுவது.

சகோதர சிநேகத்தை நாம் அடைவதென்பது, ஒரு சகோதரனின் காரியத்தில் உன்னையே அவனுடைய நிலையில் வைத்து பார்ப்பதாகும்.

இப்பொழுது நீங்கள் கூறுகின்றீர்கள்... ''ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய் குற்றஞ் செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரம் மட்டுமோ'' என்று கேட்டான்.

அதற்கு இயேசு: ''ஏழுதரம் மாத்திரம் அல்ல, ஏழெழுபது தரம் (Seventy times seven) என்று உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார்.



பாருங்கள்? இந்த சகோதர சிநேகத்தைப் பாருங்கள். ஒரு சகோதரன் முழுவதும் இருக்க வேண்டிய பிரகாரம்

இல்லையென்றாலும், அவனிடத்தில் உன் பொறுமையை நீ இழந்து விடாமல், இரு.

பாருங்கள்? இல்லை. பாருங்கள்? அவனிடம் சாந்தமுள்ளவனாக அவனை திருத்த அவனோடு கூட செல்.

121. அநேக நாட்களுக்கு முன்பு ஒருவர் என்னிடம், ''நீங்கள் இத்தகைய விசுவாசத்தை பிரசங்கித்து கிரியை செய்து கொண்டு, பின் எப்படி தேவ கூட்டு சபைகள், ஒருத்துவ சபைகள், மற்றுமுள்ள சபைகளுக்கு இன்னுமாக சென்று கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். அது சகோதர சிநேகம் ஐயா. பாருங்கள்? என்றாவது ஒரு நாள் அவர்களை கர்த்தர் திரும்பக் கொண்டு வருவார் என்ற நோக்கத்துடன், அவர்களோடு பொறுமையுடன், தன்னடக்கமாக, அவர்கள் தங்கள் இருதயத்தில் என்ன விசுவாசிக்கிறார்கள் என்பதை அறிந்துக் கொள்ளும் தேவஞானத்துடன், உன்னிலுள்ள வல்லமையானது தாழ்மையோடும், சாந்தத்தோடும் வெளியேறி அத்தகையவர்களை திருப்ப

முயற்சிப்பதேயாகும். பாருங்கள்? ஏழாவதாக சகோதர சிநேகம். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு (சகோதரன் பிரன்ஹாம் கரும்பலகையை ஏழு முறைகள் தட்டுகிறார் - ஆசி). பாருங்கள். கட்டத்திற்கு இப்பொழுது நாம் வருகிறோம். கடைசியாக அன்பைக்கூட்டி வழங்குங்கள். அதுவே தேவ அன்பு என்னும் தலைக்கல்லாயிருக்கிறது. இந்நாட்களில் ஒன்றில் சபையில்...



யார் இரட்சிக்கப்படுவார்களென்றும், யார் இரட்சிக்கப்படமாட்டார்கள் என்றும் அவருக்குத் தெரியும். நமக்குத் தெரியாது. நாம் கடலில் வலையை வீசுகின்றோம். அது எல்லா வகைகளையும் கொண்டு வருகிறது. ஆனால் தேவனுக்கோ யார் இரட்சிக்கப்படுவார்களென்றும் யார் இரட்சிக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரியும்.



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# மத்தேயு 13:47-50




47. அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகல விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது.

48. அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள்.

49. இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து,

50. அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்.

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## 63-1113 இக்காலத்தின் அடையாளம்,

New York, New York USA

சென்ற இரவு நாம் கர்த்தருடைய தூதனைக் குறித்தும் சோதோமில் நேர்ந்த அந்த அடையாளத்தைக் குறித்தும் பேசினோம்.

ஆபிரகாமுடன் பேசுவதற்காக அந்த தூதன் தங்கிவிட்டார்.

தூதனாகிய இந்த மனிதன் மாமிச ரூபத்திலிருந்த தேவனே. ஏனெனில் ஆபிரகாம் அவரை 'ஆண்டவர்' என்றழைத்தான். வேதாகமம் படிக்கும் எவரும் அந்த 'ஆண்டவர்' தேவனைக் குறிக்கிறது என்றறிவர் (Lord என்னும் அந்த ஆங்கிலச் சொல்லில் பெரிய “L”

உபயோகிக்கப்பட்டிருப்பதால், அது தேவனைக் குறிக்கிறது என்று சகோ. பிரான்ஹாம் கூறுகிறார் - தமிழாக்கியோன்).



"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்." அது ஏலோஹிமைக் குறிக்கிறது. அதற்கு,

"எல்லாவற்றிற்கும் போதுமானவர், சர்வ வல்லமையுள்ள தேவன்'' என்று அர்த்தம்.

அங்கு தேவன் மனித ரூபத்தில் ஆபிரகாமுக்கு தம்மை வெளிப்படுத்தினார்.

அவர் அழுக்கு படிந்த பயணியைப் போல் தோற்றமளித்தார். அவர் எங்கிருந்து வந்தாரென்று கூறவில்லை. ஆனால் அவர் ஆபிரகாமிடம் உரையாடினபோது, ''நான் இதை செய்தேன், நான் உனக்கு இதை வாக்களித்தேன்'' என்றார்.

பாருங்கள், அவன் "தகப்பன்'' பெயராகிய ஆபிரகாம் என்னும் பெயரினால் அவனை அழைத்தார். அதற்கு முன்பு அவன் பெயர் 'ஆபிராம்' என்றிருந்தது. அப்பொழுது அது 'ஆபிரகாம்' என்று மாற்றப்பட்டது.

அவ்வாறே 'சாராய்' என்ற பெயரும் 'சாராள்' என்று மாற்றப்பட்டது - "இராஜ குமாரத்தி"

பின்பு தேவன் ஆபிரகாமிடமிருந்து மறைந்து சோதோமுக்குச் சென்றபோது, அதுவே முடிவின் அடையாளமாயிருந்தது.

அக்கினி வானத்திலிருந்து விழுந்து, சோதோம் கொமோராவையும் சுற்றிலுமிருந்த பட்டினங்களையும் பட்சித்தது.



3. புறஜாதிகளின் உலகத்திற்கு என்ன நேரிடும் என்பதற்கு அது முன்னடையாளமாகத் திகழ்கின்றது. அது

அக்கினியினால் அழிக்கப்படும், அழிக்கப்படும்.

இவ்வுலகை இனி தண்ணீரினால் அழிப்பதில்லையென்று தேவன் வாக்களித்து, அதற்கான ஒரு அடையாளத்தையும் நமக்குத் தந்திருக்கிறார். தேவன் அடையாளமின்றி எதையும் செய்வதில்லை.

தேவன் இவ்வுலகை இனி ஒரு போதும் தண்ணீரினால் அழிப்பதில்லை என்பதன் அடையாளமாக வானவில்லை உடன்படிக்கையாக நமக்கு கொடுத்திருக்கிறார்.

இம்முறை அது அக்கினியினால் அழிக்கப்படும்.

காலங்களைக் குறித்து தேவன் குறிப்பிடும்போது, அவர், "நோவாவின் நாட்களில் பேழை ஆயத்தம் பண்ணப்பட்டபோது, எட்டு பேர் மாத்திரமே தண்ணீரிலிருந்து காக்கப்பட்டனர் (1 பேது. 3:20). மனுஷகுமாரன் வரும்போதும் அப்படியேயிருக்கும்" என்றார்.

அங்கிருந்த சிறுபான்மையோரைக் கவனியுங்கள். ”அங்கு எட்டு பேர் மாத்திரமே காக்கப்பட்டனர்.''

அவர் தொடர்ந்து, அக்காலத்தில் காணப்பட்ட நடத்தையை விவரிக்கிறார்: “புசித்து குடித்தார்கள், பெண் கொண்டு கொடுத்தார்கள்'' (லூக்.17:27). அப்படியானால்...



4. சில நாட்களுக்கு முன்பு அதை நான் படித்து, விவரித்து பிரசங்கம் செய்து கொண்டிருந்தபோது, ஒரு கருத்து எனக்கு உதயமானது.

நீங்களும் நானும் படிக்கும் அதே ஆதியாகமம் புத்தகத்தை இயேசுவும் படித்தார். எனவே அக்காலத்தில் அவர்கள் என்ன செய்தனர் என்பதை அறிந்து கொள்ள மீண்டும் ஆதியாகமம் 6ம். ஆதிகாரத்திற்கு சென்றேன். ''தேவகுமாரர்கள் மனுஷ குமாரத்திகளுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்து கொண்டார்கள்'' (ஆதி. 6:2) என்று நான் கண்டு கொண்டேன்.

அந்த மொழி பெயர்ப்பை நான் பார்த்த போது, "அவர்கள் பெண்களைத் தெரிந்து கொண்டார்கள்'' மனைவிகளாக அல்ல.

இங்கு நெவாடாவிலுள்ள ரீனோவில் நடப்பது போல் விவாகம் செய்து கொண்டு, விவாகரத்து செய்து கொள்ளுதல்; ஹாலிவுட்டைப் போல்.

"இவர்கள் பிரபலம் வாய்ந்த மனிதர்'' என்று கூறப்பட்டுள்ளது.



நீங்கள் லைஃப் பத்திரிகையை படித்திருப்பீர்கள். இங்கிலாந்தில் நேர்ந்த அந்த அவதூறு (Scandal) அதில்

எழுதப்பட்டிருந்தது, பிரபலம் வாய்ந்த அந்த மனிதனும் அந்த வேசிகளும். எவ்வாறு நமது ஆளுநர்கள் (governors) ஓ, என்னே! நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறோம்! என்ன நிகழுமென்று இயேசு கூறினாரோ அதே சூழ்நிலையில், "புசித்து குடித்தார்கள், பெண் கொண்டு கொடுத்தார்கள். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள் வரைக்கும் அதை அறியாமலிருந்தார்கள்".

அதன் பின்பு கதவு அடைக்கப்பட்டது, பிறகு வேறு தருணமேயில்லை. அதுவே நோவாவின் கடைசி பிரசங்கமாயிருந்தது.

மகத்தான எந்த ஊழியத்தில் பிரசங்கிக்கப்பட்ட கடைசி பிரசங்கம் எதுவும், இரட்சிக்கப்படக் கூடாதவர்களுக்கே பிரசங்கிக்கப்பட்டது.

அவ்வாறே நோவாவின் கடைசி செய்தியும் இரட்சிக்கப்படக் கூடாதவர்களுக்கே அளிக்கப்பட்டது.

பாருங்கள், அவன் பேழைக்குள் பிரவேசித்தான். அப்பொழுது கதவு அடைக்கப்பட்டது.



மழை பெய்வதற்கு ஏழு நாட்கள் முன்பு அவன் பேழைக்குள் நுழைந்தான். பாருங்கள், அவனுடைய செய்தி, முதலாவதாக அவன் பிரசங்கித்தான், பின்பு பேழையை

உண்டாக்கினான், அதன் பின்னர் ஏழு நாட்கள் பேழையில் அடைபட்டிருந்தான்.

ஜனங்கள், “அந்த மூடபக்தி வைராக்கியமுள்ள கிழவன் பேழைக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டான்'' என்றனர்.

ஆனால் தேவன் தாம் கதவை அடைத்தார். சோதோமிலும் அது போன்றே நிகழ்ந்தது.

5. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பாருங்கள். அவர் இவ்வுலகில் வந்த போது, கலிலேயாவின் இளைய தீர்க்கதரிசியாயிருந்தார்.

அவர் ஜெப ஆலயங்களுக்குச் சென்றார். எல்லோரும் அவரை நேசித்தனர். அவர் பிணியாளிகளை சுகப்படுத்தினார். அதுதான் அவருடைய ஊழியத்தின் முதல் பாகமாயிருந்தது.

இரண்டாம் கட்டம், தீர்க்கதரிசனம். அவர், அவருடைய காலத்திலிருந்த பரிசேயரையும் சதுசேயரையும் கடிந்து கொண்டு, அவர்கள்

குருடரென்றும், அதன் விளைவாக அவர் யாரென்று காண முடிய வில்லையென்றும், அவர்களுக்கு என்ன நேரிடப் போகிறதென்றும் உரைத்தார்.

அதன் காரணமாக அவர் குற்றஞ்சாட்டப்பட்டார். இதன் அடிப்படையில் அவர் சிலுவையில் அறையப்பட்டார்.



ஆனால் அவர்களால் செய்தியை தடுத்து நிறுத்த முடியவில்லை, நீங்கள் செய்தி கொண்டு வரும் தூதனை தடுத்து நிறுத்தலாம், ஆனால் செய்தியையோ தடுத்து நிறுத்த முடியாது.

“அவர் பாதாளத்துக்குச் சென்று, முன்பு கீழ்ப்படியாமலிருந்த காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்'' என்று வேதம் கூறுகின்றது. (1 பேது. 3:19).

அங்கு அவருடைய கடைசி செய்தி ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டது.

6. இக்காலத்தில், நோவாவின் நாட்களில் நடந்தது போலவே, ஜனங்கள் பிரசங்கித்துக் கொண்டேயிருப்பார்கள் என்றும், ஆனால் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்ட உலகிற்கு கதவு ஏற்கனவே அடைபட்டு விட்டிருக்கும் என்று நினைத்துப் பார்க்கும் போது அது பயங்கரமாயுள்ளது.

கதவு எப்பொழுது அடைபடுமென்று நமக்குத் தெரியாது. எனவே நீங்கள்

~ 16 ~

கிறிஸ்தவர்களல்லாமல் இருந்தால், இன்றிரவு அதைக் குறித்து சற்று ஆழ்ந்து சிந்தியுங்கள். அதற்கு முக்கியத்துவம் கொடுங்கள்.



நமக்கு செய்யத் தெரிந்தது ஒன்றே ஒன்று. அது தான், ''சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.'' (மாற்கு 16:15). என்று நமது ஆண்டவர் நமக்கு விட்டுச் சென்றுள்ள கட்டளையைப் பின்பற்றுவதே.

யார் இரட்சிக்கப்படுவார்களென்றும், யார் இரட்சிக்கப்படமாட்டார்கள் என்றும் அவருக்குத் தெரியும். நமக்குத் தெரியாது.

நாம் கடலில் வலையை வீசுகின்றோம். அது எல்லா வகைகளையும் கொண்டு வருகிறது. ஆனால் தேவனுக்கோ யார் இரட்சிக்கப்படுவார்களென்றும் யார் இரட்சிக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரியும்.

''என் பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவன் என்னிடத்தில் வரமாட்டான்'' (யோவான் 6:44). ''பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்'' (யோவான் 6:37). அது நமக்குத் தெரியும், பாருங்கள்.

எனவே இவர் கிறிஸ்தவர் என்றும், அவர் கிறிஸ்தவர் அல்ல என்றும் நாம் சொல்ல முடியாது, ஏனெனில் ''பரலோகராஜ்யம் கடலில் போடப்படும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது'' என்று அவர் கூறியுள்ளார். (மத், 13:47).



வலையை இழுத்த போது, எல்லா வகை கடற்பிராணிகளும் அதில் இருந்தன. அதில் தண்ணீர் சிலந்திகள், பாம்புகள், மீன்கள்,

தோட்டி மீன்கள், நல்ல மீன்கள் எல்லாமே சிக்கியிருந்தன.

தண்ணீர் சிலந்திகள் போன்றவை நகர்ந்து மீண்டும் தண்ணீரை அடைகின்றன. ஆனால் நல்ல மீன்களோ எஜமானுக்கென்று வைக்கப்படுகின்றன. நாம் வலையை வீசுகிறோம், அவ்வளவு தான்.

7. ஆனால் தண்ணீர் சிலந்தி அதன் மேல் வலை வீசப்பட்டபோதே தண்ணீர் சிலந்தியாக இருந்தது என்பதை ஞாபகம் கொள்ளவும். கூட்டத்தின் ஈர்ப்பு அதை சிக்க வைத்தது.

பாம்பு பாம்பாகவே இருந்தது. ஆனால் சுவிசேஷ வலை அதை உள்ளே இழுத்தது.

அவ்வாறே தோட்டி மீன் தோட்டி மீனாகவும், ஆமை ஆமையாகவும் இருந்தன.

ஆனால் உண்மையான மீன் தொடக்கத்திலேயே மீனாக இருந்தது.

எனவே யார் எப்படியென்று அவருக்குத் தெரியும். ஏனெனில் அவர்களுடைய பெயர்கள் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன.

உலகத்தோற்றத்துக்கு முன்பு ஆட்டுக்குட்டியானவர் அடிக்கப்பட்ட போதே அதில் எழுதப்பட்டுவிட்டன.



8. நாம் நமது பணியை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

சகோ. விக் ஒரு மூலையில் அநேக ஆண்டுகளாக வலை வீசிக் கொண்டிருக்கிறார்.

அது போன்று மற்ற ஊழியக்காரரும் வெவ்வேறு மூலைகளில் தங்கள் வலைகளை வீசிக் கொண்டிருக்கின்றனர்.

சகோதரர்களாகிய உங்களுடைய வலைகளுடன் என் வலையையும் சேர்த்து பின்னவே நான் இங்கு வந்துள்ளேன்.

அப்பொழுது அது ஒரு பெரிய வலை வீச்சாகி, நாம் அனைவரும் மீன் பிடிப்பவர்களாக ஒன்று சேர்ந்து, வலையை ஏரியின் மூலைகளிலிருந்து இழுப்போம்.

ஒரு நாளில் கடைசி மீன் ஏரியிலிருந்து அகப்படும், அப்பொழுது மீன் பிடித்தல் முடிந்துவிடும்.

அந்த மணி நேரம் நெருங்குவதை நாம் காண்பதால், நமது முழு இருதயத்தோடும் தேவனைத் தேடி, ஜெபம் செய்து, உத்தமமாக இருப்போம்.

# ஓ, தேவனோடு தனித்திருக்கும் அந்த விலையேறப்பெற்ற மணிநேரங்கள்




சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# இயேசு கிறிஸ்துவின் உவமைகள்

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

2

படங்களுடன்